சுருக்கம்

போக்குவரத்து – மாண்புமிகு அமைச்சர் (போக்குவரத்து) அவர்களால் 03.07.2018 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பு – அனைத்து அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் நவீன பின்னோக்கு கண்ணாடிகள் பொருத்துதல் – அனுமதியளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

போக்குவரத்து (அ) துறை

அரசு ஆணை (நிலை) எண் 213

நாள்: 17.07.2018

விளம்பி– ஆடி 1
திருவள்ளுவர் ஆண்டு 2049

படிக்கப்பட்டது:

1 மாண்புமிகு அமைச்சர் (போக்குவரத்து) அவர்களால் 03.07.2018 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பு.
2 போக்குவரத்து ஆணையர் / சாலை பாதுகாப்பு ஆணையர், சென்னை–5 அவர்களின் ஆணை எண் R.No.16100/C2/2017, நாள் 15.03.2018.

***

ஆணை:-

03.07.2018 அன்று போக்குவரத்துத் துறையின் மானியக் கோரிக்கை எண்.48–ன் மீது சட்டமன்றப் பேரவையில் விவாதத்திற்குப் பின் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்:-

பேருந்துகளில் நவீன பின்னோக்குக் கண்ணாடிகள் பொருத்துதல்

“பேருந்துகளில் பொருத்தப்பட்டுள்ள பின்நோக்கு கண்ணாடிகளில் ஓட்டுநரின் பார்வையில் புலப்படாத மறைவுப் பகுதிகளும் (Blind Spots) பேருந்துகள் விபத்துக்களுக்கு உள்ளாவதற்கான ஒரு முக்கிய காரணமாகும். தரமான பெரிய அளவிலான பின்னோக்குக் கண்ணாடிகளைப் பேருந்துகளில் அமைப்பதன் மூலம் ஓட்டுநரின் பார்வை எல்லையினை விரிவாக்கி மேம்படுத்துவதன் வாயிலாக, விபத்துக்களை பெருமளவில் தவிர்த்திட இயலும்.

அந்த வகையில், தமிழ்நாடு போக்குவரத்துக் கழகத்தில் முதன் முறையாக, ஓட்டுநரது பார்வையில் புலப்படாத மறைவுப் பகுதிகளை (Blind Spots) முற்றிலுமாக அகற்றிடும் உயரிய நோக்கில், இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,

(i) பரந்த கோணக் கண்ணாடி (Wide angle mirror)

(ii) நெருக்கமான அருகாமைக் கண்ணாடி (Close Proximity mirror)

(iii) மறைவுப் பகுதிகளை வெளிப்படுத்தும் கண்ணாடி (Blind spot mirror)

...2

ஆகிய மூன்று வகையான பின்னோக்குக் கண்ணாடிகள் ஆறு ஆண்டுகளுக்கும் குறைவான வயதுடைய பேருந்துகளில் பொருத்தப்படும். இதன் மூலம் ஓட்டுநர், பேருந்தின் நெருக்கமான முன்புறத்திலும், பக்கவாட்டிலும், பின்புறத்திலும் நிகழ்வுகளைத் தெளிவாகக் கண்டு அதற்கேற்ப, பேருந்துகளை கவனமாக இயக்கிடுவதன் பயனாக, விபத்துக்கள் பெருமளவில் தவிர்க்கப்படும்''.

3. மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ள சாலைப் போக்குவரத்து நிறுவனம் ஒரு முகமையாக (Nodal Agency) இருந்து 1998–ம் வருடத்திய தமிழ்நாடு ஒப்பந்த சட்டம் மற்றும் ஒப்பந்த சட்ட விதிகளுக்கு உட்பட்டு (Tamil Nadu Transparency in Tenders Act, 1998 and Rules) கொள்முதல் செய்து அனைத்து அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் நவீன பெரிய அளவிலான பின்னோக்குக் கண்ணாடிகள் பொருத்துமாறும், இதற்கான நிதியினை சாலை பாதுகாப்பு நிதியில் அனுமதிக்கப்பட்டுள்ள ரூ.55,00,000/–க்கு உட்பட்டு கொள்முதல் செய்ய வேண்டுமென அரசு இதன்வழி ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

பி. டபிள்யு. சி. டேவிதார்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், சாலைப் போக்குவரத்து நிறுவனம், சென்னை–113.
அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் மேலாண் இயக்குநர்கள்.

நகல்
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர், போக்குவரத்துத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
அரசு துணைச் செயலாளர் அவர்களின் நேர்முக உதவியாளர், போக்குவரத்துத் துறை, சென்னை–9.
தனி அலுவலர், தலைவர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

17/7/2018
பிரிவு அலுவலர்